# கிருபையுள்ள வார்த்தை ®

**KIRUBAIYULLA VAARTHAI**

லூக்கா (LUKE) 4:22

VOL - 26 | மே - MAY | 2025

ஆண்டு சந்தா ரூ. 100/- | தனிப் பிரதி ரூ. 10/- | வெளிநாட்டு சந்தா ரூ. 1,000/-





Photo taken @ Chinna suruli falls (Theni Dt.)


ஆசிரியர் Dr. பிலேமோன் ராஜா


புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை மீட்டமைக்கும் இதழ்

## இதழின் உள்ளே...


ஆசிரியர் உரை 3

பெண்கள் பகுதி 7

வாலிபர் பகுதி 9

சிறுவர் பகுதி 11



*In Memory of J.C. CHOATE*

*Guest Editors :* **Betty Choate, Jerry & Paula Bates**

*Editor :* **Dr. P.C. PHILEMON RAJA**

ஆசிரியர் குழு

**V. கிங்ஸ்லி ராஜா,** M.Th.,
**R. ஆண்டனி ராஜா,** D.Th.,
**E. ஜோசப் பிரதீப்,** B.Th., **C. கியாமிலஸ் கார்த்திக்,** B.Sc.,
**P. பேபி ராஜா,** D.Th., **P. பெவர்லி லிடியா** B.B.A.,

சட்ட ஆலோசகர்கள்

அட்வகேட் **B.** கருப்பசாமி பாண்டியன் B.A., B.L.
அட்வகேட் **V.** சுப்பிரமணியன் M.A., B.L.


## கிருபையுள்ள வார்த்தை TV நிகழ்ச்சிகள்

**தமிழன் T.V. யில்**

**ஞாயிறு காலை 7.00 மணி**

**நம்பிக்கை T.V. யில்**

**ஞாயிறு மதியம் 3.30 மணி**

செய்தியாளர்கள்

போதகர். **பிலேமோன் ராஜா** M.A., M.Th.,
(Director - JC School of Evangelism)

சகோ. **கிங்ஸ்லி ராஜா** M.Th.,
(இணை ஆசிரியர் – கிருபையுள்ள வார்த்தை)

**இந்த மாதம் பிறந்த நாள்
மற்றும் திருமண நாள் காணும்
வாசகர்கள் அனைவருக்கும்
அன்பின் வாழ்த்துக்கள்...**




**நமது
'கிருபையின் கீதங்கள்'
பாடல் புத்தகம்
புதிய பதிப்பு
ஆயத்தமாக உள்ளது.**

554 தமிழ் பாடல்கள்

40 ஆங்கில பாடல்கள்

112 சேர்ந்திசை பாடல்கள்

464 பக்கங்கள்

வேண்டுவோர் தொடர்பு கொள்ளவும் : **92 4431 4431, 999 426 7004**

**கிருபையுள்ள வார்த்தை**
நாம் கிறிஸ்துவோடு வாழ உதவும்
கிருபையின் வார்த்தை

YouTube
**@graciouswordcoc**


**World Literature Publication :** Kirubaiyulla Vaarthai, Post Box No. 15, Arasaradi, Madurai - 625 016. India

- P.C. பிலேமோன் ராஜா



ஆசிரியர் உரை

# கிறிஸ்து இல்லாத கிறிஸ்தவர்

## A CHRISTIAN WITHOUT CHRIST

அன்பான கிருபையுள்ள வார்த்தை வாசகர்கள் அனைவருக்கும் இறைமைந்தன் இயேசுகிறிஸ்துவின் ஈடுஇணையற்ற பெயராலே எனது வாழ்த்துக்கள் மற்றும் ஜெபங்கள்!

இந்த மாதம் உங்களுடன் 'கிறிஸ்து இல்லாத கிறிஸ்தவர்' என் தலைப்பின் கீழாக வேத வசனங்களின் துணைக்கொண்டு, இச்செய்தியினை பகிர்ந்துகொள்வதில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். இன்றைய கிறிஸ்தவ மார்க்க வட்டாரத்தில், அநேக கிறிஸ்தவர்களின் ஆத்துமத்தின் நிலை கிறிஸ்து அற்ற அவலநிலையாகவே இருக்கின்றபடியினால், இச்செய்தி மிகவும் உதவியாக இருக்கும்.

நாம் முற்காலத்தில் கிறிஸ்துவை சேராதவர்களும், தேவனற்றவர்களுமாக இருந்தோம் என்பது நாம் அறிந்ததே! (எபேசியர் 2:12). அந்த நிலை இப்பொழுதும் தொடர வாய்ப்புள்ளதா? ஏனெனில் 'தற்பொழுது நான் தவறாமல் சபைக்கூட்டங்களுக்கு செல்கின்றேன். அங்கே இருக்கின்ற பணிகளை செய்கின்றேன். அப்படி இருந்தும் நான் கிறிஸ்து இல்லாத கிறிஸ்தவரா?' என நீங்கள் ஒருவேளை கேட்கலாம். இந்த பாடம் 'கிறிஸ்து என்னுடன் இருக்கின்றார்' என்ற நம்பிக்கையை உடைக்கின்ற பாடம் அல்ல, மாறாக அந்த நம்பிக்கையை இன்னும் உறுதி செய்கின்ற பாடமாகும்.

நாம் எப்பொழுது (என்ன செய்யும்போது) கிறிஸ்து இல்லாத கிறிஸ்தவராக இருக்கின்றோம்? அல்லது, நாம் கிறிஸ்து இல்லாத கிறிஸ்தவராக இருக்கும்போது, என்ன செய்கிறோம்? என்பதனை அறிவதின் மூலம், நமது ஆண்டவர் இயேசுகிறிஸ்துவுடன் நமது உறவை சரிப்படுத்தி, மற்றும் பலப்படுத்திக்கொள்ள முடியும்.

### 1. நாம் இரண்டு சட்டங்களையும் கடைபிடிக்கும்போது, கிறிஸ்து இல்லாத கிறிஸ்தவராக இருக்கின்றோம்!

கலாத்தியர் 5:4 - நியாயப்பிரமாணத்தினால் நீதிமான்களாக விரும்புகிற நீங்கள் யாவரும், கிறிஸ்துவைவிட்டுப் பிரிந்து கிருபையினின்று விழுந்தீர்கள்.

பழைய பிரமாணமாகிய நியாயப்பிரமாணத்தினையும், கிறிஸ்துவின் புதிய பிரமாணத்தினையும் ஒருவர் கடைபிடிக்கும்போது, அவர் கிறிஸ்து இல்லாத கிறிஸ்தவராக இருக்கின்றார். வேத வசனம் தெளிவாக சொல்லுகின்றது, நியாயப் பிரமாணத்தினால் நீதிமானாக விரும்புகின்ற ஒருவர் கிறிஸ்துவைவிட்டு பிரிகின்றார் மற்றும் கிருபையையும் இழக்கின்றார்.

பழையதினையும், புதியதினையும் ஒன்றாக இணைக்க வேண்டாம் என்று ஆண்டவராகிய இயேசு மீண்டும், மீண்டும் வலியுறுத்தினார் (மத்தேயு 9:16-17). பழைய பிரமாணத்தின் கட்டளையை சொல்லி, அப்படியே அதற்கு எதிரான மாற்று கட்டளையை கொடுத்தார். உதாரணமாக, "உனக்கடுத்தவனை நேசி, சத்துருவை பகை என்பது பழைய பிரமாணம், நான் உங்களுக்கு சொல்கின்றேன், உங்கள் சத்துருக்களை சிநேகியுங்கள் என்றார்" (மத்தேயு 5:43,44).

இருதயத்தில் எழுதப்பட்டு, உள்ளத்தில் வைக்கபட்ட புதிய பிரமாணம் என்பது, கல்லில் எழுதப்பட்டு மரப்பெட்டியில் வைக்கப்பட்ட பழைய

பிரமாணத்தின்படி இருக்காது என்று, எரேமியா தீர்க்கதரிசியின் வாயிலாகவே கர்த்தர் முன்னறிவித்திருந்தார் (எரேமியா 31:31-34). ஆகையால், கர்த்தர் பழைய ஏற்பாட்டினை திருத்தி, புதிய ஏற்பாட்டினை தந்துவிட்டார் என நினைக்கக் கூடாது. அது வேறு, இது வேறு என்பதினை நாம் புரிந்துக்கொள்ள வேண்டும். ஒரு கிறிஸ்தவர் பழைய பிரமாணத்தினை கடைபிடிக்க வேண்டிய அவசியமில்லை என்பதனை உணர்த்திட, ஆவியானவர் ரோமர், கலாத்தியர், எபிரெயர் என்ற நிருபங்களை நமக்கு கொடுத்திருக்கின்றார். ஆகையால் ஒரு கிறிஸ்தவர் நியாயப்பிரமாணத்தினை கடைபிடிக்க முயலும்போது, அவர் கிறிஸ்து அற்ற கிறிஸ்தவராகின்றார்.

## 2. நாம் இரண்டு எஜமான்களை சேவிக்கும் போது, கிறிஸ்து இல்லாத கிறிஸ்தவராக இருக்கின்றோம்!

மத்தேயு 6:24 இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ் செய்ய ஒருவனாலும் கூடாது. ஒருவனைப் பகைத்து, மற்றவனைச் சிநேகிப்பான். அல்லது ஒருவனைப் பற்றிக்கொண்டு, மற்றவனை அசட்டைபண்ணுவான். தேவனுக்கும் உலகப்பொருளுக்கும் ஊழியஞ்செய்ய உங்களால் கூடாது.

ஒருவர் கர்த்தருக்கு சேவை செய்துக்கொண்டே, உலகத்திற்கும் சேவை செய்துக்கொண்டே இருக்கும்போது, அவர் கிறிஸ்து இல்லாத கிறிஸ்தவராக இருக்கின்றார். அதாவது இயேசுவிற்கு சேவை செய்துக்கொண்டே, சாத்தானுக்கும் சேவை செய்வது; ஒரே நேரத்தில் கிறிஸ்துவையும் உலகத்தினையும் சமாதானப்படுத்திட முயற்சிப்பது; அது முடியாது என்பதனை நாம் நினைவில்கொள்ள வேண்டும்.

ஆண்டவர் இயேசுவிடம் நண்பனாக, சேவகனாக, சீடனாக இருந்துக்கொண்டே, யூதாஸ் உலகப்பொருளாகிய பணத்திற்கு சேவை செய்துக்கொண்டிருந்தான். அவன் உடல் ரீதியாக இயேசுவின் அருகில் இருந்தான்; உள்ளத்திலோ இயேசுவைவிட்டு வெகுதொலைவில் இருந்தான். மற்ற 11 பேரும் அவன் இயேசுவிற்காக வேலை செய்ய வெளியே செல்வதாக எண்ணினர்; அவனோ, இயேசுவிற்கு எதிராக வேலை செய்துக் கொண்டிருந்தான் (யோவான் 13:27-30; மாற்கு 14:11). நான் எப்பொழுது உலகத்தின் பின்னே ஓட ஆரம்பிக்கின்றேனோ, அப்பொழுது இயேசுவுடன் எனது பயணத்தினை நிறுத்தி விடுகிறேன்.

ஆண்டவர் இயேசுவையும், உலகத்தினையும் ஒருவர் ஒன்றாக நேசிக்க முடியாது. சபையும் முக்கியம், திருமண வீட்டிற்கு செல்வதும் முக்கியம் என பேசுவதும் எண்ணுவதும், கிறிஸ்து அற்ற நிலையில் ஒருவரிடத்தில் ஏற்படும் மாற்றத்தின் துவக்கமாகும். அவர்கள் இன்னும் ஒருபடி மேலே சென்று, 'ஒருவாரம் தொழுகைக்கு


### வாசகர்களின் கவனத்திற்கு

அன்பான வாசகர்களே!
உங்கள் ஆண்டு சந்தா தொகையை
G-Pay, PhonePe மூலம் அனுப்பி
உங்கள் சந்தாவை
புதுப்பித்துக் கொள்ளவும்.
நன்றி!

ஆண்டு சந்தா : ரூ. 100/-
No. 92 4421 4421

வங்கிக் கணக்கில் செலுத்த,

A/c Name : Kirubaiyulla Varthai
A/c No. : 57022317422
IFSC Code : SBIN0011068
Branch : SBI - Bye Pass Road Branch, Madurai.

செல்லாவிடில், கர்த்தர் ஒன்றும் கோபித்துக் கொள்ளமாட்டார்' என்றும், 'எங்கள் சூழல் இயேசுவிற்கு தெரியும் அவர் மன்னித்துவிடுவார்' என்றும், தாங்கள் செய்கின்ற பாவசெயலிற்கு, துணிகரமான பதில்களை பேசுவர். அவர்கள் தங்கள் வாழ்வில் இயேசுவினை புறந்தள்ளி, உலகத்தினை தங்களுக்கு எஜமானாக மாற்றிவிட்டனர் என்பது தான் உண்மை (லூக்கா 16:13; 1 சாமுயேல் 8:7; யோவான் 12:48).

நம்முடைய எஜமானாகிய ஆண்டவர் இயேசு, தன்னை பின்பற்றுகின்ற ஒவ்வொரு கிறிஸ்தவருக்கும், உலகமெங்கும் நற்செய்தி அறிவிக்க சொல்லி கட்டளையிட்டுள்ளார் (மத்தேயு 28:18-20; மாற்கு 16:15). அதனை அனுதினமும், எல்லா சூழலிலும், முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் சரியாக செய்து, ஆண்டவருக்காக இம்மண்ணில் வேலை செய்தனர் (அப். 8:1-4; 5:40-42). நாம் நமது ஆண்டவர் இயேசுவின் வார்த்தைக்கு கீழ்படிந்து, அனுதினமும் நற்செய்தி அறிவிக்கும் போது, அவரே நமது எஜமானாக இருக்கின்றார் என்பதனை வெளிப்படுத்துகின்றோம். அவர் நம்முடன் இருப்பார் (மத்தேயு 28:20). அவ்வாறு நற்செய்தி அறிவிக்காமல் இருக்கின்ற வேளைகளில், நாம் சாத்தானுக்காக வேலை செய்கின்றபடியினால், அவனை எஜமானாகக் கொண்டிருக்கின்றோம். இது நாம் விரும்பி செய்தது அல்ல எனினும், யாரும் இயேசுவைப் பற்றி அறியக்கூடாது என்ற சாத்தானின் விருப்பத்தினை நிறைவேற்றுகின்றபடியினால், நமக்கு அவன் முதலாளியாகி விடுகின்றான் (2 கொரிந்தியர் 4:1-5). ஒருவரும் இரட்சிக்கப்படக் கூடாது என்பது சாத்தானின் விருப்பம்! ஒருவரும் கெட்டுப்போகக் கூடாது என்பது பிதாவின் விருப்பம். நாம் யாருடைய விருப்பத்தின்படி வாழ்கின்றோமா, அவரே நமது எஜமான்! ஆகையால், யார் நம்முடைய எஜமான் என்று? சற்றே சிந்திப்போம், செயல்படுவோம்! நம்முடைய எஜமானாகிய இயேசுவை சந்திக்க ஆயத்தப்படுவோம்! (மத்தேயு 25:1-10).

## 3. நான் இரண்டு விதமான நம்பிக்கை கொண்டிருக்கும்போது, கிறிஸ்து இல்லாத கிறிஸ்தவனாக இருக்கின்றேன்.

1 இராஜாக்கள் 18:21 - அப்பொழுது எலியா சகல ஜனத்தண்டைக்கும் வந்து: நீங்கள் எந்தமட்டும் இரண்டு நினைவுகளால் குந்திக்குந்தி நடப்பீர்கள். கர்த்தர் தெய்வமானால் அவரைப் பின்பற்றுங்கள். பாகால் தெய்வமானால் அவனைப் பின்பற்றுங்கள் என்றான், ஜனங்கள் பிரதியுத்தரமாக அவனுக்கு ஒன்றும் சொல்லவில்லை.

இஸ்ரயேல் மக்கள் கர்த்தரையும் கடவுளாக நம்பினார்கள் மற்றும் பாகாலையும் தெய்வமாக நம்பினார்கள். இப்படி இரண்டுவிதமான நம்பிக்கை அவர்களை தேவனற்றவர் களாக்கியது. நம்மிடத்திலும் இரண்டுவிதமான நம்பிக்கை இருக்கும்பட்சத்தில், நாம் கிறிஸ்து அற்ற கிறிஸ்தவர்களாக இருப்போம்! இரண்டு நம்பிக்கை (நினைவுகள்) நம்மை குந்தி குந்தி (தயங்கி, அவிசுவாசத்துடன்) நடக்க வைக்கும். அவிசுவாசிகளிடத்தில் கிறிஸ்து இருப்பதில்லை மற்றும் அவர்களுக்கு ஒன்றும் செய்ய போவதுமில்லை (மத்தேயு 13:50).

கர்த்தரையும் நம்புவது, உலகத்தினையும் நம்புவது என்ற இரண்டு நம்பிக்கை உடைய ஒவ்வொரு கிறிஸ்தவரும், கிறிஸ்து அற்றவராகவே இருக்கின்றோம். கர்த்தர் சொன்ன பைபிள் வார்த்தைகளையும் அப்படியே நம்புவது, அதேப்போல உலகம் என்ன சொல்லுதோ அதனையும் அப்படியே உண்மையென நம்புவது. நாம் அனைவரும் ஒரே தந்தை (ஆதாம்), ஒரே தாய் (ஏவாள்)க்கு பிறந்தவர்கள் என்று சொல்வதினையும் நம்புவோம்! இந்த உலகம் சொல்லுகின்ற உயர்ந்த, தாழ்ந்த இன (ஜாதி) வகைகளையும் அப்படியே நம்புவோம்! எல்லா நாட்களையும் கர்த்தர் படைத்துவிட்டு, 'நல்லது' என்று

சொன்னதினையும் நம்புவோம்! இந்த உலகம், சில நாட்களை நல்ல நாட்கள், சில நாட்களை கெட்ட நாட்கள் என்று சொன்னால் அதனையும் நம்புவோம்! இப்படிபட்டவர்கள் தலைவராகிய (தலையாகிய) கிறிஸ்துவை பற்றிக்கொள்ளாமல், உலகத்தினை பற்றிக்கொண்டு வாழ்கின்றவர்களாக இருக்கின்றனர். தாங்கள் கிறிஸ்துவுடனே உலகத்தின் வழிபாடுகளுக்கு மரித்தவர்கள் என்பதனை மறந்து, மனிதர்களுடைய கற்பனையின்படி தொடாதே, ருசிபாராதே, தீண்டாதே என்ற கட்டளைகளுக்கு உட்பட்டு வாழ்கின்றனர் (கொலோசெயர் 2:18-23).

ஆண்டவர் இயேசு, மனிதனை எது தீட்டுபடுத்தும் என்பதை தெளிவாக சொன்னார். இருதயத்திலிருந்து புறப்பட்டுவரும் பொல்லாத சிந்தனைகளும், கொலைபாதகங்களும், விபசாரங்களும், வேசித்தனங்களும், களவுகளும், பொய்ச்சாட்சிகளும், தூஷணங்களும் மனுஷனைத் தீட்டுப்படுத்தும் என்றார் (மத்தேயு 15:18-20). நம்மில் நிறைய பேர் பெண்களுக்கு உரிய மாதாந்திர வழிபாடு, கணவன் மனைவிக்குள்ளான தாம்பத்தியம் போன்றவற்றை தீட்டு என நினைத்து சபைக் கூடிவருதலை புறக்கணிக்கின்றனர். அன்பானவர்களே! இவைகள் அல்ல தீட்டு, 'பாவம் தான் தீட்டு' என ஆண்டவர் இயேசு சொன்னார். ஆகையால் உலகத்தின் சத்தத்தினை கேளாதிருப்போம் மற்றும் நம்பாதிருப்போம்! அவைகளை கேட்டு, நம்பி செயல்பட்டால் நாம் கிறிஸ்து இல்லாத கிறிஸ்தவராகிவிடுவோம் என்பதனை மறந்துவிட வேண்டாம்!

## 4. நான் இரண்டு விதமான வேடம் கொண்டிருக்கும்போது, கிறிஸ்து இல்லாத கிறிஸ்தவனாக இருக்கின்றேன்.

வெளிப்படுத்தல் 3:14-16 - லவோதிக்கேயா சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது என்னவெனில்: உண்மையும் சத்தியமுமுள்ள சாட்சியும், தேவனுடைய சிருஷ்டிக்கு ஆதியுமாயிருக்கிற ஆமென் என்பவர் சொல்லுகிறதாவது. உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன். நீ குளிருமல்ல அனலுமல்ல, நீ குளிராயாவது அனலாயாவது இருந்தால் நலமாயிருக்கும். இப்படி நீ குளிருமின்றி அனலுமின்றி வெதுவெதுப்பாயிருக்கிறபடியினால் உன்னை என் வாயினின்று வாந்திபண்ணிப் போடுவேன்.

நாம் இரண்டு விதமான வாழ்க்கை வாழும்போது, கிறிஸ்து அற்ற கிறிஸ்தவர்களாக இருக்கின்றோம். சபையில், தேவ சமூகத்தில் ஒரு வாழ்வு. சமுதாயத்தில், குடும்பத்தில், தொழில் மற்றும் வேலையில் வேறொரு வாழ்வு, நான்கு பேர் கவனிக்கும் போது ஒரு வாழ்வு, யாரும் கவனிக்காத போது ஒரு வாழ்வு என இரட்டை வாழ்க்கை வாழ்கின்ற ஒவ்வொருவரும் கிறிஸ்து அற்ற கிறிஸ்தவர்களாக இருக்கின்றோம்.

விண்ணரசின் திறவுகோலாகிய தேவ வசனத்தினை பெற்ற பேதுருவும் ஒருமுறை, மாய்மாலமான செயலை செய்தார். அதனை பவுல் முகமுகமாக கண்டித்தார். (கலா 2:12-15) சபையில் ஒரு வேடம், சமுதாயத்தில் ஒரு வேடம் போடுவது மிகவும் கண்டிக்கத்தக்கது மட்டுமின்றி, அது கர்த்தர் அற்ற வாழ்வாகும். நாம் எப்படி வாழ்கின்றோம் என்பதனை சற்று நிதானித்து அறிவோம்!

இறுதியாக, பிரியமானவர்களே! நம் வாழ்வில் கிறிஸ்து இருக்கின்றாரா? அவர் இருக்கின்ற வாழ்வு வாழ்கின்றோமா? அவர் இல்லாமல், அவர் இருப்பதுபோல எண்ணி வாழ்ந்து, நம்மை நாமே ஏமாற்றிக் கொண்டுள்ளோமா? அவர் இல்லாத வாழ்வு நிச்சயமாக வாழ்வே அல்ல, என்பதனை நாம் அறிவோம்! ஆகையால் அவர் நம்மோடு எப்போதும் இருக்கதக்கதாக வாழ்வோம்!

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

- அன்புடன், ஆசிரியர்

பெண்கள் பகுதி

# புத்தியுள்ள பெண்

பிரியமானவர்களே! ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள், ஜெபங்கள்.

நீதி. 14:1ல் நாம் படிக்கும்போது, புத்தியுள்ள பெண் தன் வீட்டைக் கட்டுகிறாள் (குடும்பத்தை) என்பதை நம்மால் புரிந்துகொள்ள முடிகிறது.

ஆம் அன்பானவர்களே! ஆதியிலே தேவன் நம்மை படைத்ததின் நோக்கம், சித்தம் இவையெல்லாம் குடும்பத்தை கட்ட வேண்டும் என்பதே! அதற்காகவே மனிதனுக்கு ஏற்ற துணையாக அவர் மனுஷியை படைத்திருக்கிறார். அவருடைய சாயலிலே நாம் படைக்கப்பட்டு இருக்கிறோம் (ஆதி. 1:27). அப்படியென்றால் அவரின் சாயலாகிய எண்ணம், சிந்தனை நமக்கும் அப்படியே இருக்க வேண்டும் என்பதே நம் வாழ்வின் பிரதான செயலாக இருக்க வேண்டும். சரி, புத்தியுள்ள பெண்கள் எப்படியெல்லாம் செயல்படுவார்கள் என்று நாம் வேதத்திலிருந்து கற்றுக்கொள்ளுவோமா?

## 1) கர்த்தர் மேல் பக்தி:

ஒரு வீடு (குடும்பம்) நன்றாக கட்டப்பட வேண்டும் என்றால், அந்த குடும்பம் தேவபக்தி நிறைந்த குடும்பமாக இருக்க வேண்டும். ஏனென்றால் கர்த்தர் தான் நம் குடும்பத்தை கட்டுகிறவராக இருக்கின்றார். (சங். 127:1)-ல் நாம் இதை வாசித்து தெரிந்துக்கொள்ள முடியும். அப்படி கர்த்தர் ஒரு குடும்பத்துடன் இல்லையென்றால், நாம் எத்தனை முயற்சி எடுத்தாலும் நம்முடைய அனைத்து பிரயாசங்களும் வீண் என்று வசனம் சொல்லுகிறது. நாம் வேதத்தை படித்து, தேவபிள்ளைகளின் ஆலோசனைகளைக் கேட்டு, அதின்படியே நம் குடும்பத்தை கட்ட அனைத்து முயற்சிகளையும் எடுக்கும்போது, நிச்சயமாகவே நம் குடும்பம் அன்பிலும், ஒற்றுமையிலும் கட்டியெழுப்பப் படும். "இயேசு" அந்த வீட்டின் தலைவராக இருந்து அதை நடத்துவார்.

**"If God is the Head of your family then it is a Blessed home"**

கிறிஸ்துவின்மேல் அன்புள்ள பெண்கள், தங்கள் வீட்டில் குடும்ப ஜெபம் நடத்துவார்கள். பிள்ளைகளை வேத வாசிப்பிலும், ஜெபத்திலும், தேவ பக்தியிலும் வளர்ப்பார்கள். அந்த குடும்பம் கிறிஸ்துவை மையமாக கொண்ட குடும்பமாக இருக்கும். தேவனுக்கு மகிமை, கனம் உண்டாக்குகின்ற குடும்பமாக திகழும்.

## 2) கணவன்மேல் அன்பு:

ஒரு நல்ல குடும்பம் கட்டப்பட வேண்டும் என்றால், மனைவியானவள் கணவனிடத்தில் அன்புகொண்டு, அவருக்கு கீழ்ப்படிய வேண்டும். ஏனென்றால், வேதம் சொல்லுகிறது, "மனைவிகளே, கர்த்தருக்கேற்கும்படி, உங்கள் புருஷருக்குக் கீழ்ப்படியுங்கள்" (கொலோ. 3:18) கர்த்தருக்கேற்கும்படி என்று இங்கு நாம் வாசிக்கின்றோம். அதாவது, தேவனை பிரியப்படுத்தும் படியாக சொந்த புருஷருக்கு கீழ்ப்படிய வேண்டும்.

கணவனுக்கும் மனைவிக்குமான உறவு என்பது, கிறிஸ்துவுக்கும் சபைக்குமுள்ள உறவைப் போன்றது என வேதம் வலியுறுத்துகிறது (எபே. 5:23). கர்த்தர் தாமே குடும்பத்தின் கணவனுக்கு இந்த ஆளுகையைக் கொடுத்திருக்கிறார். ஆதியிலிருந்தே ஒரு (ஒரே) கோட்பாடுதான் (ஆதி. 3:16) தேவ திட்டத்தில் எந்த மாற்றமும் கிடையாது. நாம் மாற்றவும் முயற்சி செய்யக்கூடாது.

## 3) பிள்ளைகளுக்கான நமது கடமை:

பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்தரம் (சங். 127:3) கர்த்தரிடத்திலிருந்து பெற்றுக்கொண்ட சுதந்திரத்தை

(தொடர்ச்சி... 9ம் பக்கம்)

## அறிந்து கொள்வோம்

### மாதம் ஒரு "பூ" செவ்வந்தி



சிவந்தி அல்லது செவ்வந்தி (Chrysanthemum) இருவித்திலைத் தாவர வகையைச் சேர்ந்த ஒரு பூக்கும் தாவரம். கண்ணியாகக் கட்டி மகளிர் தலையில் இதனைச் சூடிக்கொள்வர். சிவந்திப்பூ மாலை திருமணத்தின்போது அணிந்துகொள்ளப்படும். இதன் மலர் மணம் மிக்கது. தோட்டங்களில் சிவந்திப் பூவைப் பயிரிட்டு விற்பனை செய்கின்றனர்.

இந்தப் பூவானது வெள்ளை, மஞ்சள், சிவப்பு நிறங்களில் பூக்கும். இந்த நிறப் பூக்கள் தனித்தனிப் பயிர்வகை. ஆசியா மற்றும் வடமேற்கு ஐரோப்பாவைத் தாயகமாகக் கொண்டது. செவ்வந்திப்பூவை சாமந்திப்பு, சிவந்திப்பூ என பலவாறு அழைக்கின்றனர்.

கர்த்தருக்கேற்ற விதத்தில் நாம் வளர்க்க வேண்டும். பிரியமானவர்களே! நம் ஆசை, நம் கனவு, நம் லட்சியங்களை பிள்ளைகள் மீது புகுத்தக்கூடாது. அவர்கள் கர்த்தருக்கே உரியவர்கள். "சாமுவேலைப் போல" ஆவிக்குரிய பிள்ளையாக, நாம் பிள்ளைகளை வளர்க்க வேண்டும். புத்தியுள்ள பெண்கள் தங்கள் குடும்பத்தில் ஆற்ற வேண்டிய கடமைகளை சரியாக செய்கிறார்கள். 'அவள் சோம்பலின் அப்பத்தை புசியாமல்' என்று வசனம் சொல்லுகிறது. புத்தியுள்ள பெண்கள் குணசாலியாக நடந்து கொள்வார்கள். தன்னை பெலத்தால் இடைக் கட்டிக்கொண்டு காரியங்களை செய்பவள் (நீதி. 31:27).

பிரியமானவர்களே! பெண்கள் தங்கள் குடும்பத்தை சரியாக நடத்துவதின் மூலம் நல்ல சபையை, நல்ல சமுதாயத்தை கட்டுகிறார்கள். தந்திரமுடையவர்களாக அல்ல, புத்தியுள்ள குணசாலியான பெண்களாக கர்த்தருக்கு பயந்து வாழ வேண்டும். வேதாகமத்தில் நாம் அநேக பெண்களைக் குறித்து படிக்கின்றோம். அதில் கடவுளுக்கென்று தங்களை அர்ப்பணித்தவர்களின் வாழ்க்கையும், அதினால் அவர்களுக்கு கிடைத்த ஆசீர்வாதத்தையும் பார்க்க முடியும். கடவுளுக்கு பயப்படாத, புத்தியில்லாத பெண்களைக் குறித்தும் வாசிக்கின்றோம். அவர்களின் முடிவு எப்படிப்பட்டது என்றும் நமக்கு வேதத்தின்மூலம் தெரியும். (ஏவாள், லோத்தின் மனைவி, யேசபேல், மார்த்தாள், சப்பிராள்).

புத்தியுள்ளவர்கள், தேவ மகிமையை தங்கள் வாழ்வில் அடைந்தவர்கள். புத்தியில்லாதவர்கள் அதை இழந்துப்போனார்கள். புத்தியுள்ள பெண்கள் கர்த்தருக்கு பிரியமான குடும்பத்தை பூலோகத்தில் கட்டுவதினாலே, அவர்கள் பரலோகத்திலும் தங்கள் வீட்டை கட்டுகிறார்கள்.

### 4) தன்னை ஆயத்தமாக வைத்திருப்பவள்:

நீதி. 31:10 – 'குணசாலியான ஸ்திரீயை கண்டுபிடிப்பவன் யார்? அவளுடைய விலை முத்துக்களைப் பார்க்கிலும் உயர்ந்தது' என்கிறது வேதம். அப்படியென்றால், ஒரு பெண் திருமணத்திற்கு முன்பாகவே தன்னை ஒரு புத்தியுள்ள, கடவுளுக்கு பிரியமான பெண்ணாக, வேதாகமத்துப் பெண்களைப்போல ஆயத்தப்படுத்திக் கொள்ள வேண்டும். அப்படி தன்னை கர்த்தருக்கேற்றபடி ஆயத்தப்படுத்துகிற பெண்ணே, புத்தியுள்ள பெண்ணாக நடந்துகொள்வாள். அவர்களைக் குறித்தே நாம் படித்தோம். தன்னை அவள் எப்படியெல்லாம் தயார் செய்துகொள்ள வேண்டும் என்று நீதி. 31-ஐ வாசிக்கும்போது நாம் தெளிவாக புரிந்துகொள்ள முடியும்.

புத்தியுள்ள பெண்கள் மணவாளன் வர எப்பொழுதும் ஆயத்தமாக இருப்பார்கள் (மத். 25:1-13). நாமும் அவர்களைப்போல, கிறிஸ்து மீண்டும் வரும்போது அவரோடே பரலோகம் செல்ல, நம்மைநாமே எந்நேரமும் ஆயத்தமாக வைத்திருப்போம். நம் ஆத்துமாவை வசனத்தின் மூலம் காத்துக் கொள்வோம்!

– சகோதரி. **பெவர்லி விதியா கிங்ஸ்லி**

## Gospel Through Media by Evangelism Team

**Philemon & Kingsly in Tamil:** **Tamilan TV:** Sunday 7:00 - 7:15 am.
**Nambikkai TV:** Sunday 3:30 - 4:00 pm.

**Rajanayagam & Benny Martin in Tamil:** **Nambikkai TV:** Tuesday 6:30-7:00 am & Friday 7:30 - 8:00 am

**Arjunan in Tamil:** Every Monday - Saturday 6:00 pm on **Joy TV.**

**Hindi TV program: Sunny, Francis, & Vinay David:** Sunday (7:00-7:30) pm, Friday 8:00-8:30 pm All on **Subha Sandesh** Hindi Channel

**P. K. Varghese in Malayalam:** Every Saturday 6:00-6:30 am on **Jai Hind TV.**

**Joshua & Ricky Gootam in Telugu:**
Every Sunday at 6:00-6:30 p.m. on **Subhavartha TV.**

Saturday at 6:00-6:30 a.m. on **Araadhana TV.**

Every day at 7:00 a.m. and 3:00 p.m. on **Kanthi TV** in A. P. only.

**Amul Bansod – Aurangabad (Marathi)**

**MCN News** channel: Monday, Wednesday, Friday – 7:30 AM to 8:00 AM.

# யூதாவின் குடும்பம்
# FAMILY OF JUDAH

அன்பின் வாலிப தம்பி, தங்கைகளே! உங்கள் அனைவருக்கும் இல்லறத்தினை உண்டாக்கி, அதற்கு ஆசீயும் நல்கிய பிதாவாகிய தேவனுடைய நாமத்தினாலும், அவ்வில்லறத்தினை நல்லறமாக்கிட நற்போதனையும் தந்த, ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலும், அந்த போதனையின்படி நம்மில் வாசமாயிருந்து, நம்மை வழிநடத்துகின்ற பரிசுத்த ஆவியானவரின் நாமத்தினாலும் எனது வாழ்த்துக்களை தெரிவிப்பதில் அகமகிழ்கின்றேன்.

யூதா என்பவர், யாக்கோபு - லேயாள் தம்பதியின் 4 வது மகன். யூதா என்றால் துதி என்று பொருள். இஸ்ரவேலின் 12 கோத்திரங்களில் யூதாவின் கோத்திரத்தினை பற்றியே அதிக தீர்க்கத்தரிசனங்கள் உள்ளது. இவர் 12 கோத்திர பிதாக்களில் ஒருவராக இருந்தாலும், இவரது கோத்திரத்தில் தான் தாவீதும், அவருடைய வம்சத்தில் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவும், இம்மண்ணில் மனிதனாக பிறந்தார் என்பது நாம் அறிந்ததே.

இரண்டு மடங்கு ஆசீர்வாதத்தினை யோசேப்பின் குடும்பம் பெற்றிருந்தாலும், யூதாவின் குடும்பம் (கோத்திரம்) அந்த நாட்களில் மிகவும் வலிமை வாய்ந்ததாக இருந்தது. அவர்கள் கர்த்தருடைய துணையினால், பின்னால் தனித்தே பெரிய தேசமாக மாறிய வரலாறும் உண்டு. இஸ்ரவேலின் ராஜாக்களைவிட, யூதா கோத்திரத்து ராஜாக்களே கர்த்தரைச் சார்ந்து, மிகவும் வலிமைமிக்கவர்களாக வாழ்ந்தார்கள். அந்த யூதாவின் குடும்பத்தினை பற்றி அறிவது நம் விசுவாசத்தினை கட்டியெழுப்புவதற்கு உதவியாக இருக்கும். அவர்களைப் பற்றி ஒரு மூன்று குறிப்புகளை நாம் தியானம் செய்வோம்.

## 1. கர்த்தருக்காக யுத்தம் செய்த குடும்பம்

எண்ணாகமம் 10:14 "யூதா சந்ததியாருடைய பாளயத்தின் கொடி அவர்கள் சேனைகளோடே முதலில் புறப்பட்டது. அவனுடைய சேனைக்கு அம்மினதாபின் குமாரன் நகசோன் தலைவனாயிருந்தான்"

யூதாவின் குடும்பம் கர்த்தருக்காக யுத்தம் செய்த குடும்பம். கர்த்தருக்காக யுத்தம் செய்ய எப்பொழுதும் அவர்கள் முன்வரிசையில் நின்றனர். அன்றைய நாட்களில் யுத்தம் செய்தல் என்பது, எதிரிகளோடு சண்டையிடுவதாக இருந்தது. இன்றைய நாட்களில் கர்த்தருக்காக யுத்தம் செய்தல் என்றால், மற்றவர்களோடு சண்டையிடுவது அல்ல. கர்த்தருக்காக யுத்தம் செய்தல் என்பது கர்த்தருக்காக, அவருடைய வார்த்தையின்படி வைராக்கியமாக வாழ்வதாகும். அப்படி வாழ்கின்ற வாழ்வில் வருகின்ற இடையூறுகளை, துன்பங்களை தாங்கிகொண்டு, விசுவாசத்தில் நிலைநிற்பதாகும் (எபேசியர் 6:10-18).

ஏனெனில், நம்முடைய போராயுதங்கள் மாம்சத்துக்கேற்றவைகளாயிராமல், அரண்களை நிர்மூலமாக்குகிறதற்குத் தேவபலமுள்ளதும், தர்க்கங்களையும், தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகின்ற, கர்த்தருடைய வசனமாக இருக்கின்றது. நமது ஆயுதம் கர்த்தருடைய வசனம். நமது யுத்தம் கர்த்தருடைய வசனத்தின்படி வாழ்கின்ற வாழ்வாக இருக்கின்றது (எபேசியர் 6:10-18; 2 கொரிந்தியர் 10:3-5).

கர்த்தரோடு யுத்தம் செய்ய வேண்டாம் என கமாலியேல் யூதமத தலைவர்களை எச்சரித்தார் (அப்போஸ்தலர் 5:39). கர்த்தரோடு யுத்தம் செய்தல் என்பது அவருடைய வார்த்தைக்கு எதிராக செயல்படுவதும் மற்றும் வாழ்கின்றதாகும். நம் குடும்பம் எப்படி? அது கர்த்தருக்காக யுத்தம் செய்கின்ற குடும்பமா? அல்லது கர்த்தரோடு யுத்தம் செய்கின்ற குடும்பமா? கர்த்தருக்காக நாம் யுத்தம் செய்தால், கர்த்தர் நமக்காக யுத்தம் செய்வார் (யாத். 14:14).

## 2. கர்த்தரால் பாதுகாக்கப்பட்ட குடும்பம்

ஆதியாகமம் 49:8-10 ''யூதாவே, சகோதரரால் புகழப்படுபவன் நீயே. உன் கரம் உன் சத்துருக்களுடைய பிடரியின்மேல் இருக்கும். உன்

தகப்பனுடைய புத்திரர் உன்முன் பணிவார்கள். யூதா பாலசிங்கம், நீ இரை கவர்ந்து கொண்டு ஏறிப்போனாய். என் மகனே, சிங்கம்போலும் கிழச்சிங்கம்போலும் மடங்கிப்படுத்தான். அவனை எழுப்புகிறவன் யார்? சமாதான கர்த்தர் வருமளவும் செங்கோல் யூதாவைவிட்டு நீங்குவதும் இல்லை, நியாயப்பிரமாணிக்கன் அவன் பாதங்களை விட்டு ஒழிவதும் இல்லை. ஜனங்கள் அவரிடத்தில் சேருவார்கள்."

அடுத்ததாக, யூதாவின் குடும்பம் கர்த்தரால் பாதுகாக்கப்பட்ட குடும்பம் என நாம் அறிகின்றோம். சமாதான கர்த்தராகிய ஆண்டவர் இயேசுகிறிஸ்து இப்புவியில் மனிதனாக பிறக்கும் வரையில் அவர்கள் பாதுகாக்கப்படுவார்கள் என்று சொல்லப்பட்ட தீர்க்கத்தரிசனத்தின்படியே, பரலோக பிதாவினால் பாதுகாக்கப்பட்டனர். கிறிஸ்துவின் மணவாட்டியாகிய திருச்சபையும் அவ்வாறே பிதாவினால், கிறிஸ்துவின் மறுவருகை வரை பாதுகாக்கப்படும். அத்திருச்சபைக்குள் இருக்கின்ற நாம் ஒவ்வொருவரும் பாதுகாக்கப் படுவோம் (1தெச. 5:23,24).

கர்த்தர் யோபுவை வேலியடைத்து பாதுகாத்தார் அல்லவா? நம்மை காக்காமலிருப்பாரா? நிச்சயம் காப்பார் (சங்கீதம் 121). அதுவரை நாம் கர்த்தருடைய கரத்திற்குள் அடங்கியிருக்க வேண்டும் (1பேதுரு 5:6). நாம் கர்த்தருடைய பாதுகாப்பிற்குள், அவருடைய கரங்களுக்குள் இருக்கின்றோமா? கை மீறி நடக்கின்றோமா?

### 3. கர்த்தருக்காக தங்களை ஆயத்தப் படுத்திக்கொண்ட குடும்பம்

ஆதியாகமம் 49:10-12 "சமாதான கர்த்தர் வருமளவும் செங்கோல் யூதாவைவிட்டு நீங்குவதும் இல்லை, நியாயப்பிரமாணிக்கன் அவன் பாதங்களை விட்டு ஒழிவதும் இல்லை. ஜனங்கள் அவரிடத்தில் சேருவார்கள். அவன் தன் கழுதைக்குட்டியைத் திராட்சச்செடியிலும், தன் கோளிகைக் கழுதையின் குட்டியை நற்குல திராட்சச்செடியிலும் கட்டுவான். திராட்சரசத்திலே தன் வஸ்திரத்தையும், திராட்சப்பழங்களின் இரத்தத்திலே தன் அங்கியையும் தோய்ப்பான். அவன் கண்கள் திராட்சரசத்தினால் சிவப்பாயும், அவன் பற்கள் பாலினால் வெண்மையாயும் இருக்கும்."

யூதாவின் குடும்பம் கர்த்தருக்காக யுத்தம் செய்த குடும்பம் மற்றும் கர்த்தரால் காக்கப்பட்ட குடும்பம் மாத்திரமல்ல, கர்த்தர் தங்களிடத்தில் வரும்படியாக தங்களை ஆயத்தப்படுத்திக் கொண்ட குடும்பமாகும். இந்த உலகமும் அதிலுள்ள யாவும் அழிந்து போகும், ஆகையால் நாம் கர்த்தருடைய வருகைக்கு நம்மை தூய்மையாக ஆயத்தப்படுத்தும்படி பைபிள் நம்மை எச்சரிக்கின்றது (2பேதுரு 3:10-14).

நாம் ஒவ்வொருவருமே, கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு நாளில் நாம் செய்த நன்மைக்கும், தீமைக்கும் தக்கபலனை அடைய போகின்றவர்களாக இருக்கின்றபடியினால் (2கொரி. 5:10) நாமும், நம் குடும்பமும் புத்தியுள்ள கன்னிகை போல, கர்த்தருடைய வருகைக்காக ஆயத்தமாக இருக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம் (மத்தேயு 25). அலட்சியமாக ஆயத்தமற்ற நிலையில் இருந்த புத்தியற்ற கன்னிகைகள் பறக்கணிக்கப்பட்டு தண்டிக்கப் பட்டனர்.

நம் குடும்பம், கர்த்தருக்காக ஆயத்தமான குடும்பமா? அல்லது அலட்சியமான குடும்பமா? நம் குடும்பத்தினை யூதாவின் குடும்பத்தினை போல கர்த்தருக்கு உகந்ததாக கட்டுவோம்!


### சிறுவர் பகுதி பதில் எழுதியவர்கள்

| | | |
|---|---|---|
| 1. | A. சுபிக்ஷா | – பெருமாள் வலசு |
| 2. | A. ஹானா ஜோதிராணி | – மதுரை |
| 3. | V. ஏஞ்சல் ஜோயன்னா | – மதுரை |
| 4. | D. டேஃப்னி | – சென்னை |
| 5. | D. ஜுனித்தா | – சென்னை |
| 6. | A. சாம்குமார் | – பெருமாள் வலசு |
| 7. | M. அபி பிலேமோன் | – எழுகம்வலசு |
| 8. | M. ஜோனத்தான் | – கரூர் |
| 9. | J. நவீன் பீட்டர் | – மதுரை |
| 10. | J. கிறிஸ்டினா ஜாய்ஸ் | – மதுரை |
| 11. | S. ஜூடா லியோ | – ரஸ்தா |
| 12. | G. ஜெர்லின் | – ரஸ்தா |

சிறுவர் பகுதி

# சவுல் அரசனாக முடிசூட்டுதல்

ஹாய் குட்டீஸ் மீண்டும் இந்த மாதம் உங்களோடு பேசுவதில் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த மாதம் சவுல் அரசனாக முடிசூட்டுதல் பற்றி படிக்கலாம். இஸ்ரேல் தேசத்திலே சவுல் என்னும் ஒருவர் இருந்தார் சவுலின் அப்பா பெயர் கீஸ் அவர் மிகவும் பராக்கிரமசாலியான மனுஷன். ஆனால் தன் மகனாகிய சவுல் மிகவும் சௌந்தர்யமான அழகான வாலிபன் அதேபோல மிகவும் உயரமான மனுஷன். ஒரு நாள் தன் அப்பாவின் கழுதைகள் காணாமல் போயிற்று, அப்பொழுது தன் மகனாகிய சவுலை அழைத்து அவனை நோக்கி நம் கழுதைகள் காணாமல் போனது, நீ போய் நம் வேலைக்காரரில் ஒருவனை கூட்டிக்கொண்டு கழுதைகளை தேட புறப்பட்டுப் போ என்றான்.



சவுல் அண்ணா என்ன செய்தார் தெரியுமா? தன் அப்பா என்ன சொன்னாரோ அதை அப்படியே செய்யும்படியாக புறப்பட்டு போனான். சவுல் தன் அப்பாவுக்கு கீழ்ப்படிந்து நடந்தான். பிள்ளைகளே நீங்களும் கூட இந்த சிறு வயதிலேயே உங்க அப்பா அம்மாவுக்கு கீழ்படிந்து நடவுங்கள். சரி அதுக்கப்புறம் என்னாச்சு படிக்கலாமா? சவுல் தன் நண்பரைக் கூட்டிக்கொண்டு கழுதைகளைத் தேட புறப்பட்டு செல்கிறான். கழுதைகளை எங்கும் தேடியும் கிடைக்கவில்லை, அப்பொழுது சவுல் தன் வேலைக்காரனை பார்த்து, கழுதைகள் கிடைக்கவில்லை நாம் திரும்பி வீட்டுக்கு செல்லலாம் என்று அவனோடே பேசினான். அப்பொழுது அவன் வேலைக்காரன், அப்படி அல்ல நாம் இன்னும் தேடிப் பார்ப்போம் இந்த சூர் என்னும் ஊரிலே கர்த்தருடைய மனுஷன் ஒருவர் இருக்கிறார், அவரிடம் போய் நாம் கேட்டால் அவர் கழுதைகள் எங்கு இருக்கும் என்று நமக்குச் சொல்லுவார் என்றான்.

பிள்ளைகளே நீங்கள் ஒரு நல்ல காரியத்திற்காக முயற்சி எடுக்கும்போது தளர்ந்து போகாமல் அது கிடைக்கும் வரை முயற்சி எடுங்கள் சவுலுக்கு கிடைத்த வேலைக்காரனை போல உங்கள் வாழ்க்கையில் நீங்கள் எடுக்கும் முயற்சிகளுக்கு நல்ல நண்பர்களோடு கைகோர்த்து நடவுங்கள் கர்த்தர் அந்த முயற்சிக்கான பலனை நிச்சயம் தருவார். அப்பொழுது சவுல் தன் வேலைக்காரனை நோக்கி நாம் கர்த்தருடைய மனுஷனை சந்திக்க போகும் பொழுது வெறும் கையோடு எப்படி செல்வது நம் கையில் ஒன்றும் இல்லையே என்றான். அப்பொழுது வேலைக்காரன், நீ ஒன்றுக்கும் கவலைப்படாதே இதோ என் கையில் கொஞ்சம் பொருள் இருக்கிறது அதை அவரிடம் கொடுத்து விடலாம் அப்பொழுது கர்த்தருடைய மனுஷன் நம் கழுதைகள் எங்கே உள்ளது என்று சொல்வார் என்றான். பிள்ளைகளே நீங்களும் கூட உங்கள் நண்பர்கள் இல்லாதவர்களாக இருக்கும்பொழுது அவர்களுக்கு உங்களிடம் உள்ளதை கொடுத்து உதவுங்கள். பிறகு இருவரும் கடந்து சென்று கர்த்தருடைய மனுஷனாகிய சாமுயேலை சந்தித்தார்கள் சாமுயேல் சவுலைப் பார்த்தவுடனே கர்த்தர் சொன்ன இஸ்ரயேலின்ராஜா இவன்தான் என்று உணர்ந்து கொண்டான். அப்பொழுது சாமுயேல், சவுலை இஸ்ரேல் நாட்டுக்கு அரசனாக முடிசூட்டினார்.

பிள்ளைகளே சவுலின் வாழ்க்கையிலே நாம் என்ன கற்றுக் கொண்டோம். கர்த்தர் சவுலின் அழகை குறித்தோ அல்லது உயரமான மனிதன் என்பதற்காகவோ அவனை அரசனாக முடிசூட்ட வில்லை. மாறாக அவனுக்குள் இருந்த நல்ல குணாதிசயங்கள், அதாவது அவன் தன் அப்பாவுக்கு கீழ்ப்படிந்து நடந்தான். நல்ல நண்பரை தெரிந்து கொண்டான். நல்ல காரியத்திற்காக எடுத்த முயற்சிகளை கைவிடாதிருந்தான். கர்த்தருடைய மனுஷனை பார்க்கும்பொழுது வெறும் கையோடு போகக்கூடாது என்று சிந்தித்தான். இது போன்ற நல்ல குணங்களே அரசனாக தேர்ந்தெடுக்க வைத்தது. பிள்ளைகளே! நீங்களும் கூட சவுலைப் போன்ற நல்லகுணாதிசயங்களை வளர்த்துக் கொண்டால் கர்த்தர் உங்களை உயர்த்துவார். கர்த்தர் உங்களோடு இருந்து உங்களுக்கு எல்லா வகையிலும் உதவி செய்வார். ஆமென்.

**மனப்பாட வசனம் :** **ரோமர் 2:7** "சோர்ந்துபோகாமல் நற்கிரியைகளைச் செய்து, மகிமையையும் கனத்தையும் அழியாமையையும் தேடுகிறவர்களுக்கு நித்தியஜீவனை அளிப்பார்."

— சகோ. பீட்டர்

சிறுவர் பகுதி

# ஏதேன் தோட்டம்



கிறிஸ்துவுக்குள் அன்பான செல்லப்பிள்ளைங்களா! எல்லாரும் எப்படி இருக்கிங்க? இந்த மாதத்திற்காக கடவுளுக்கு நன்றி சொன்னீங்களா? பரிசுத்த தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

கர்த்தருக்குப் பிரியமான செல்லப்பிள்ளைகளா!! இந்த மாதம் நாம் அனைவரும் சேர்ந்து கர்த்தர் உண்டாக்கிய ஒரு தோட்டத்தைப் பற்றி படிக்கலாமா? வாங்க படிக்கலாம்.

செல்லங்களா! தோட்டம் என்றால் எப்படி இருக்கும்?. தோட்டம் என்றால் மனிதர்களாகிய நாம் சாப்பிடுவதற்கு தேவையான பழங்களும்,காய்கறிகளும் மற்றும் கீரைகளும் விளையச்செய்கிற இடம்தான் தோட்டம். அதாவது நமக்கு தேவையான காய்கறிகளை நாமே விளையச்செய்கிற இடம்தான் தோட்டம். நாம் அனைவருக்குமே நிறைய விதமான தோட்டங்களைப் பற்றி தெரியும். உதாரணமாக வீட்டுத் தோட்டம், மாடித்தோட்டம். விவசாயத் தோட்டம் மற்றும் பல. ஆனால் மனிதனுடைய நாம் இன்றைக்கு கைகளால் உண்டாக்கப்படாமல், உலகத்தையும் அதில் உள்ள அனைத்தையும் படைத்த நம்முடைய உண்மையான கர்த்தர் உண்டாக்கின தோட்டமாகிய ஏதேன் தோட்டத்தைப் பற்றி படிக்கப்போகிறோம்.

உலகத்தையும் மனிதனையும் கர்த்தர் படைத்ததற்குப் பிறகு மனிதனுக்காக கர்த்தர் உண்டுபண்ணின தோட்டம்தான் ஏதேன் தோட்டம். பிள்ளைகளா என்ன ஒரு அன்பு கர்த்தர் நம்மீது வைத்திருக்கின்றார் பாருங்களேன். ஏதேன் தோட்டம் கர்த்தரால் படைக்கப்பட்ட தோட்டம். அந்த தோட்டத்தில் மனிதனை குடியிருக்கவும் அந்தத் தோட்டத்தை பண்படுத்தவும். அந்த தோட்டத்தில் உள்ள பழங்களை உணவாக உண்டு வாழவும் கர்த்தர் அவர்களுக்கு கட்டளையிட்டிருந்தார். எவ்வளவு அழகான இடத்தில் மனிதனை கர்த்தர் இருக்கச் செய்தார் பாருங்க குழந்தைகளா! எப்ப பசி எடுத்தாலும் சாப்பிடுவதற்கு வகை வகையான பழங்களை கர்த்தர் கொடுத்திருக்கிறார். நம்முடைய வீட்டிலேயே நமக்கு ரொம்ப புடிச்ச இடம் எது? நாம் விரும்பி சாப்பிடுகிற பொருள்கள் எங்கே இருக்கிறதோ அதுதானே நமக்கு ரொம்பவும் புடிச்ச இடம். ஏனென்றால் அந்தஇடம்தான் நமக்கு மகிழ்ச்சியை தருகின்ற இடம். அதுபோலத்தான் ஏதேன் தோட்டம் மகிழ்ச்சியின் இடம்.

மகிழ்ச்சியின் இடமாகிய ஏதேன் தோட்டத்தில் மனிதனை கர்த்தர் குடியிருக்கும்படி வைத்துவிட்டு, நன்மை தீமை அறியத்தக்க ஒரே ஒரு மரத்தின் பழத்தை சாப்பிட வேண்டாம் என்று கட்டளை கொடுத்திருந்தார். உதாரணமாக நம்முடைய வீட்டிலே நம்முடைய அப்பாவும் அம்மாவும் நாம் சாப்பிடுவதற்கு நிறைய திண்பண்டங்களை வாங்கி வைத்திருப்பார்கள், அதில் ஒரு திண்பண்டத்தை (சாக்லேட்) சாப்பிடவேண்டாம் என்றும் சொல்லியிருப்பார்கள். ஏனென்றால் அது நம்முடைய உடம்புக்கு கெடுதல் என்பதால் அப்படிச் சொல்வார்கள்.அதுபோலதான் நம்முடைய கர்த்தரும் ஒரு குறிப்பிட்ட பழத்தை சாப்பிடவேண்டாம் என்று சொல்லியிருந்தார். ஆனால் நாம என்ன செய்கிறோம் சாக்கலேட் தான் முதல்ல சாப்பிடுகிறோம். அதே மாதிரிதான், கர்த்தர் உண்டாக்கின முதல் ஆண் ஆதாமும், முதல் பெண்ணாகிய ஏவாளும் கர்த்தர் சாப்பிடவேண்டாம் என்று சொன்ன பழத்தை சாப்பிட்டார்கள்.

அப்பாவும், அம்மாவும் சாப்பிட வேண்டாம் என்று சொன்ன சாக்லேட்டை நாம் சாப்பிட்டு விட்டால், நமக்காக வாங்கிய மற்ற நிறைய திண்பண்டங்களை மறைத்து விடுவார்கள் அல்லவா. இது சிறிய தவறுதான் செல்லங்களா. ஆனால் அப்பாவும் அம்மாவும் நம்மிடம் சாப்பிட வேண்டாம் என்று சொல்லுகிற எந்த பொருளும் நம்முடைய உடம்புக்கும் மனசுக்கும் நல்லது இல்லை.அதே நேரத்தில் ஒரே ஒரு சாக்கலேட்டிற்கு ஆசைப்பட்டு மற்ற நிறைய திண்பண்டங்களை இழந்து போகிறோம்.

அதே போலதான் ஆதாமும் ஏவாளும் ஒரே ஒரு பழத்திற்கு ஆசைப்பட்டு. கர்த்தர் வேண்டாம் என்று சொன்ன பழத்தை சாப்பிட்டதால் கர்த்தர் அவர்களை ஏதேன் தோட்டத்தை விட்டு அனுப்பிவிட்டார். ஒரு பழத்திற்காக தன்னுடைய வாழ்நாள் முழுவதும் உணவு கிடைக்கும்படி இருந்த ஏதேன் தோட்டத்தை மனிதன் இழந்து போனான்.கர்த்தருக்குப் பிரியமான செல்லப்பிள்ளைகளா பைபிளில் உள்ள வசனம் ஒரு காரியத்தை நம்மிடம் வேண்டாம் என்று சொன்னால் அது கடைசி வரைக்கும் வேண்டாம்.

**மனப்பாட வசனம் : நீதிமொழிகள் 7:2** "என் கட்டளைகளையும், என் போதகத்தையும் உன் கண்மணியைப்போல் காத்துக்கொள், அப்பொழுது பிழைப்பாய்."

– சகோ. சந்தோஷ்குமார் மாகாளியப்பன்

சிறுவர் பகுதி

# தெபோராளும், பாராக்கும்

நியாயாதிபதிகள் 4ம் அதிகாரம்


கடவுளுக்கு பிரியமான செல்லங்களா! எல்லாரும் எப்படியிருக்கிறீர்கள்? நல்லா இருக்கீங்களா?

இப்பக்கூட தெபோராள் அக்காவை பற்றி நாம் தெரிந்துகொள்வோமா? இவங்க என்ன செய்தாங்க தெரியுமா? கடவுளை நம்பும்படி இஸ்ரயேல் மக்களுக்கு உதவி செய்தாங்க.

இவங்க யார் தெரியுமா? இவங்க ஒரு தீர்க்கதரிசி. இஸ்ரயேல் மக்கள் கர்த்தரின் கட்டளைகளை கடைபிடிக்க நிறுத்திவிட்டாங்க, கானானியர்கள் அவர்களை ஆட்சிசெய்தார்கள், கஷ்டமும் துன்பமும் தொடர்ந்து வந்தபோது அவர்கள் இஸ்ரயேல் மக்கள் கடவுளின் உதவியைக்கேட்டு ஜெபித்தார்கள், கடவுள் அவர்களின் ஜெபத்தைக் கேட்டார்.

கானானியர்களுக்கு எதிராக போராட இஸ்ரயேலின் ஒரு படையை ஒன்று திரட்டும்படி கர்த்தர் தெபோராளிடம் கூறினார்.

கானானியர்களிடம் அநேக போர் வீரர்களும், ரதங்களும் இருந்தன. இது இஸ்ரயேல் படையை பயமுறுத்தின. ஆனால் தெபோராள் அக்காள் அல்ல கர்த்தரே அவர்களுக்கு உதவுவார் என்று அந்த அக்காவுக்கு தெரியும்.



பாராக்கு இஸ்ரயேலின் தலைவனாக இருந்தார், ஆனால் போராட விரும்பவில்லை, தெபோராள் படையுடன் சென்றால், கர்த்தர் அவர்களை காப்பார் என்று அவன் நினைத்தான். தெபோராள் செல்ல ஒப்புக்கொண்டாங்க.

கடவுளுக்கு பிரியமான செல்லங்களா! ஜெபிப்பதை நிறுத்தக்கூடாது, கடவுளை தேடுவதை நிறுத்தக் கூடாது, சபைக்குப் போவதை நிறுத்தக்கூடாது. அம்மா அப்பாவுக்கு கீழ்ப்படிவதை நிறுத்தக்கூடாது. அப்பதான் கடவுளின் பாதுகாப்பும், உதவியும் கிடைக்கும், வெற்றியும் கிடைக்கும். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார்.

**மனப்பாட வசனம் : சங்கீதம் 66:20** "என் ஜெபத்தைத் தள்ளாமலும், தமது கிருபையை என்னைவிட்டு விலக்காமலும் இருந்த தேவனுக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக."

– சகோ. அன்பு ஏசுதாஸ்

## பொதுவான செய்திகள்

# மதுரை மாட்டுத்தாவணி பேருந்து நிலையம்



இந்த பேருந்து நிலையம் மொத்தம் எட்டு நடைமேடை கொண்டது.

வாருங்கள் எந்த ஊர்களுக்கு செல்லும் பேருந்துகள் எங்கும் நிற்கும் என்பதை தெரிந்து கொள்வோமா?

**நடை மேடை எண்: 1**

சென்னை, திருப்பதி, வேலூர், பெங்களூர், SETC பேருந்துகள் நிற்கும், KSRTC எர்ணாகுளம்.

**நடை மேடை எண்: 2**

திருச்சி, மணப்பாறை, விராலிமலை, கொட்டாம்பட்டி, துவரங்குறிச்சி, நத்தம், திண்டுக்கல் (நத்தம் வழி மட்டும்) கடலூர், நெய்வேலி, புதுச்சேரி, விழுப்புரம், பெரம்பலூர், திருவண்ணாமலை, காஞ்சிபுரம்.

**நடை மேடை எண்: 3**

தஞ்சாவூர், புதுக்கோட்டை, கும்பகோணம், மயிலாடுதுறை, சீர்காழி, சிதம்பரம், திருவாரூர், மன்னார்குடி, நாகப்பட்டிணம், வேளாங்கண்ணி, அறந்தாங்கி, தொண்டி, சிவகங்கை, காளையார்கோவில், திருவாடானை, இளையான்குடி. ஆணந்தூர்.

**நடை மேடை எண்: 4**

மேலூர், பொன்னமராவதி, திருப்பத்தூர், காரைக்குடி, தேவகோட்டை, கல்லல், சிங்கம்புணரி.

**நடை மேடை எண்: 5**

பரமக்குடி, கமுதி, முதுகுளத்தூர், சாயல்குடி, மானாமதுரை, தாயமங்கலம், இளையான்குடி, RS மங்கலம், இராமநாதபுரம், இராமேஸ்வரம்.

**நடை மேடை எண்: 6**

சிவகாசி, ஸ்ரீவில்லிபுத்தூர், ராஜபாளையம், சங்கரன்கோவில், தென்காசி, செங்கோட்டை, புனலூர், கொல்லம்.

**நடை மேடை எண்: 7**

அருப்புக்கோட்டை, விளாத்திகுளம், விருதுநகர், இருக்கன்குடி, கோட்டூர், சாத்தூர், தூத்துக்குடி, உடன்குடி, திருச்செந்தூர்.

**நடை மேடை எண்: 8**

கோவில்பட்டி, திருநெல்வேலி, வள்ளியூர், நாகர்கோவில், கன்னியாகுமரி, களியக்காவிளை, மார்த்தாண்டம், திருவனந்தபுரம்.

# பொன் கன்றுக்குட்டி

**யாத்திராகமம் 32ம் அதிகாரம்**

செல்லப்பிள்ளைகளே! எல்லாரும் எப்படியிருக்கிறீர்கள். இந்த விடுமுறை காலங்களில் கடவுளுக்கு பிரியமான காரியங்களையும், வேதவசனங்களை அதிகம் படிக்கிற நேரங்களையும் கொண்டிருப்பீர்கள் என்று கர்த்தருக்குள் நம்புகிறேன். அதுவே தேவனுக்கு மிகவும் பிடிக்கும் குட்டீஸ்!

பிள்ளைகளா, இம்மாதம் பொன் கன்றுக்குட்டி வணக்கத்தை இஸ்ரயேல் மக்கள் செய்தததை பற்றி படிக்க இருக்கிறோம்.

தேவனானவர் எகிப்திலிருந்து இஸ்ரயேல் மக்களை வனாந்திரத்தில் நடத்திக் கொண்டு வரும்போது, அந்த ஜனங்கள் கடைபிடிக்கும்படியாக அவர்களுக்கு பத்துக்கட்டளையை கொடுப்பதற்காக மோசேயை சீனாய் மலைக்கு வரவழைத்தார். அவ்வாறே மோசே சீனாய் மலையில்மேல் ஏறிச் சென்றார். அவர் சென்று சில நாட்கள் ஆகிவிட்டது. அதற்குள் இந்த ஜனங்கள் மோசே எங்கு சென்றாரோ? என்ன நடந்துவிட்டதோ? தெரியவில்லை. இந்த வனாந்திரத்திலிந்து நம்மை வெளியே நடத்திக்கொண்டு செல்ல ஒரு கடவுளை நாம் உண்டாக்கிக் கொள்ளலாம், வாருங்கள் என்று சொல்கிறார்கள்.

இந்த பேச்சுக்கு மோசேயினுடைய அண்ணாகிய ஆரோனும் அதற்கு உடன்பட்டு, தான் செய்வது அறியாது சரி என்று சொல்கிறார். அப்பொழுது அவர் என்ன செய்தார் தெரியுமா? குட்டீஸ்! இஸ்ரயேல் ஜனங்களிடம் உங்களது பொன் ஆபரணங்களைக் கழற்றி, என்னிடம் கொண்டு வாருங்கள் என்று சொன்னார். அவ்வாறே அந்த மக்கள் ஆரோனிடம் கொண்டுவந்து கொடுக்கிறார்கள். அப்போது, அவற்றை உருக்கி, ஒரு பொன் கன்றுக்குட்டியை செய்கிறார். அதைப் பார்த்ததும், தங்களை எகிப்திலிருந்து அற்புதமாய், அதிசயமாய், தங்களது கரம்பிடித்து அழைத்து வந்த மெய்யான தேவனை மறந்து, ஆரோன் உருவாக்கிய அந்த பொன் கன்றுக்குட்டியைப் பார்த்து, எங்களை எகிப்திலிருந்து வழிநடத்தி வந்த எங்களது கடவுள் இதுவே என்று சொல்லி, பெரிய ஒரு விருந்து கொண்டாடி, அந்த பொன் கன்றுக்குட்டியை வணங்குகிறார்கள். இது எவ்வளவு பெரிய பாவம் பார்த்தீர்களா பிள்ளைகளே!



இதை கர்த்தர் பார்த்து மிகவும் கோபம் கொண்டார். அதனால் அவர் மோசேயிடம்: சீக்கிரமாய்க் கீழே போ, இந்த ஜனங்கள் ரொம்ப மோசமாக நடந்து கொண்டிருக்கிறார்கள். என் கட்டளைகளை மறந்து, ஒரு பொன் கன்றுக்குட்டியை வணங்கிக் கொண்டிருக் கிறார்கள் என்று சொல்கிறார்.

உடனே மோசே அவசர அவசரமாக மலையிலிருந்து கீழே வந்து பார்த்தபோது, அந்தப் பொன் கன்றுக்குட்டியைச் சுற்றி அந்த ஜனங்கள் ஆடிப்பாடிக் கொண்டிருப்பதைப் பார்க்கிறார்! உடனே மோசேக்கு பயங்கர கோபம் வருகிறது. தேவன் தனக்கு எழுதி கொடுத்த 10 கட்டளைகள் எழுதப்பட்ட அந்த இரண்டு கற்பலகையைக் கீழே தூக்கிப்போடுகிறார். அவை சுக்குநூறாக உடைந்தது. பின்பு அந்தப் பொன் கன்றுக்குட்டியை உருக்கி, அதை பொடியாக்கி விடுகிறார்.

இந்த ஜனங்கள் ரொம்பவும் மோசமான காரியத்தைச் செய்து விட்டார்கள். அதனால் மோசே சில ஆட்களைப் பார்த்து: அந்தப் பொன் கன்றுக்குட்டியை வணங்கிய கெட்ட மக்களை உங்கள் பட்டயங்களால் வெட்டிப் போடுங்கள் என்று சொல்கிறார். அவர் சொன்னபடியே செய்தார். அன்றைய தினம் ஏறக்குறைய 3,000 பேர் மாண்டார்கள்.

குட்டீஸ்! இதிலிருந்து என்ன கற்றுக்கொள்கிறோம். தேவனானவரை தவிர மற்ற யாரையோ, மற்ற பொருட்களையோ அவருக்கு நிகரான எதையுமே நாம் வணங்குவதை அவர் அங்கீகரிப்பதில்லை. மிகவும் அவர் கோபப்படுவார் என்பதை நாம் தெரிந்துகொள்வோம். எனவே, நமது வாழ்நாள் முழுவதும் தேவனை மட்டும் தொழுகை செய்து அவரையே பற்றிக்கொண்டிருக்க முடிவுசெய்வோம். தேவன் நம்மை ஆசீர்வதித்து வழிநடத்துவார். ஆமென். அடுத்த இதழில் சந்திப்போமா!

**மனப்பாட வசனம் : ரோமர் 4:21** "தேவன் வாக்குத்தத்தம்பண்ணினதை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறாரென்று முழு நிச்சயமாய் நம்பி, தேவனை மகிமைப்படுத்தி, விசுவாசத்தில் வல்லவனானான்."

– சகோ. ஜான் செல்லையா

## சிறுவர்களுக்கான கேள்விகள்

1. சவுலின் அப்பா பெயர் என்ன? அவர் எதை தேட புறப்பட்டுச் சென்றார்?
2. கடவுள் மனிதனை படைத்து எதிலே குடியிருக்கும்படி வைத்தார்? அங்கு மனிதனுக்கு என்ன கட்டளை கொடுத்தார்?
3. தெபோராள் அக்கா ஜனங்களுக்கு எந்த உதவியை செய்தாங்க?
4. ஆரோன் பொன் கன்றுக்குட்டியை எப்படி செய்தார்?
5. பொன் கன்றுக்குட்டிக்கு முன்பு ஜனங்கள் என்ன செய்தார்கள்? அது தேவனுக்கு பிரியமாயிருந்ததா?

## மே மாத கேள்விகள்

(ரோமர் புத்தகத்தில் இருந்து)

1) தேவனுடைய நியாயத்தீர்ப்பு எதின்படி இருக்கும்?
2) யார் மீது உக்கிரகோபாக்கினை வரும்?
3) பொல்லாங்கு செய்கிற எந்த மனுஷ ஆத்துமாவுக்கும் என்ன உண்டாகும்?
4) எவன் நன்மை செய்கிறானோ அவனுக்கு உண்டாவது என்ன?
5) தேவன், இயேசு கிறிஸ்துவைக் கொண்டு எவைகளை நியாயந்தீர்ப்பார்?
6) நம்முடைய அநீதி எதனை விளங்க பண்ணமாட்டாது?
7) இயேசுகிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் பலிப்பது எது?
8) கிரியை செய்கிறவனுக்கு வருகிற கூலி எப்படி எண்ணப் படுவதில்லை?
9) ஆபிரகாமுக்கு விசுவாசம் எப்பொழுது நீதியாக எண்ணப்பட்டது?
10) உலகத்தை சுதந்தரிப்பான் என்கிற வாக்குத்தத்தம் ஆபிரகாமுக்கு எதினால் கிடைத்தது?

**பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் : 05-06-2025**

அனுப்ப வேண்டிய முகவரி : **சகோதரி. பேபி ராஜா**
45C/1, சர்ச் லேன், காரனேசன் தெரு,
அரசரடி, மதுரை - 625 016
செல் : 92 4421 4421, 92 4431 4431

### சென்ற இதழ் பதில்கள்

| | |
|---|---|
| 1. ரோமர் 1:16 | 6. ரோமர் 1:21 |
| 2. ரோமர் 1:16 | 7. ரோமர் 1:25 |
| 3. ரோமர் 1:18 | 8. ரோமர் 1:28 |
| 4. ரோமர் 1:18 | 9. ரோமர் 1:32 |
| 5. ரோமர் 1:25 | 10. ரோமர் 1:32 |

### சென்ற இதழின் கேள்விகளுக்கு பதில் எழுதியவர்கள்

| | | | |
|---|---|---|---|
| 1) | A. கார்பஸ் பிலேமோன் | - | மதுரை |
| 2) | M. ராஜா | - | கரூர் |
| 3) | Mrs.C. வள்ளி சிதம்பரம் | - | கரூர் |
| 4) | G.ஏஞ்சலம்மாள் | - | மதுரை |
| 5) | Y. ஜெயசுதா பொன்செல்வி | - | சென்னை |
| 6) | Mrs.R. சரோஜா | - | தென்கலம் |
| 7) | S. அசோக்குமார் பிரின்ஸ் | - | தூத்துக்குடி |
| 8) | Mrs.தெல்மா ஸ்டான்லி | - | மதுரை |
| 9) | Mrs. பியூலா ஜேசுராஜன் | - | புதுவை |
| 10) | C. வைலட் கிறிஸ்டோபர் | - | தளவாய்புரம் |
| 11) | A. லலிதா | - | புதுக்கோட்டை |
| 12) | P. ரேச்சல் ஜானிமா | - | நெல்லை |
| 13) | Mrs.A. அன்னத்தாய் ஆல்பர்ட் | - | தூத்துக்குடி |
| 14) | Mrs. இந்திரா பாண்டி | - | மதுரை |
| 15) | S. கார்த்திக் | - | கரூர் |
| 16) | Mrs. சூரிய பிரியா | - | மதுரை |
| 17) | M. அன்பழகன் | - | தங்கமேடு |
| 18) | P.ஷைனி | - | காங்கேயம் |
| 19) | Mrs.D. குளோரி திலகவதி | - | சென்னை |
| 20) | Mrs.J. பூங்கொடி | - | முத்தூர் |
| 21) | S. பேபி சந்தோஷ்குமார் | - | தங்கமேடு |
| 22) | V. மைனாவதி வசந்த் | - | தங்கமேடு |
| 23) | Mrs.சாந்தி வில்லியம் | - | புதுக்கோட்டை |
| 24) | D.I. அன்பு சுதந்திரம் | - | ஏர்வாடி |
| 25) | Dr. இவாஞ்சலின் ஜோன்ஸ் | - | சேலம் |
| 26) | M. பியூலா சாந்தி | - | ஈரோடு |
| 27) | Mrs. குளோரி பால்ராஜ் | - | தஞ்சாவூர் |
| 28) | J. கிறிஸ்டோபர் சாந்தகுமார் | - | மதுரை |
| 29) | S. ஷீபா ஞானவின்சா | - | டோனாவூர் |
| 30) | J.V. சுந்தரபாய் வில்லியம் | - | சேலம் |
| 31) | Mrs.P. சமாதானம் பீட்டர் | - | விருதுநகர் |
| 32) | Mrs.A. இமல்டா சுந்தர்சிங் | - | ஈரோடு |
| 33) | R. ஞானசிரோன்மணி | - | மதுரை |
| 34) | Mrs. சாந்தி ஜோயல் | - | திருச்சி |
| 35) | M.S. ஜேம்ஸ் | - | திண்டுக்கல் |
| 36) | Mrs. ஆட்லின் ஆனந்தன் | - | மதுரை |
| 37) | Mrs. பட்ரிசியா டேவிட் | - | சேலம் |
| 38) | Mrs. ஹெலன் திலக் | - | தூத்துக்குடி |
| 39) | J. ஜான்சி | - | ஆனைமலை |
| 40) | A. அரவிந்த் | - | மதுரை |
| 41) | D.சந்திரன் மோசஸ் | - | பெங்களூர் |
| 42) | N. ஜான் செல்லையா | - | மதுரை |
| 43) | Mrs.J. ஜெயராணி ஜான் | - | மதுரை |
| 44) | S. பாக்கியராஜம் | - | மதுரை |
| 45) | Mrs. ராணி குமரன் | - | கரூர் |
| 46) | Mrs. ஹெப்ஸிபா தாமஸ் | - | படப்பை |
| 47) | Mrs. ஜெயந்தி செல்வகுமாரி | - | தரங்கம்பாடி |
| 48) | Mrs. சாந்தி ஜோயல் | - | திருச்சி |
| 49) | Mrs. மேரி ராஜ் | - | மதுரை |
| 50) | M. ஈஸ்வரி முருகன் | - | கரூர் |
| 51) | S. டேவிட் சாந்தகுமார் | - | வல்லம் |
| 52) | Mrs. காந்தா மனோகரன் | - | திருச்சி |
| 53) | A. ரோஸ்மேரி | - | சென்னை |
| 54) | Mrs. தேவி ராஜாசிங் | - | திருப்பூர் |
| 55) | Mrs. பெரில் பாஸ்கர் | - | படப்பை |

தொடர்ந்து இப்பகுதியில் பங்குபெறும் அனைவருக்கும் வாழ்த்துக்கள் !

Place of Publication : 45 C/1, CHURCH LANE, CORONATION STREET, ARASARADI, MADURAI - 16.
Printed & Published by P.C. PHILEMON RAJAH
Printed at THEE CLASSIC PRINTERS, 27, KAKA THOPPU, MADURAI - 1 94421 23819
Registered News Paper No. : TNTAM/2011/42166
Postal Registration No. : TN/MA/67/2024 - 2026
Date of Publication : 9th May 2025
Posted at Arasaradi HPO on 10th & 11th May 2025


## கிருபையுள்ள வார்த்தை வெளியிட்டுள்ள சிறப்பு புத்தகங்கள்









அன்பார்ந்த வாசகர்களே! இந்த அனைத்து புத்தகங்களையும் உங்கள் ஆத்மீக வளர்ச்சிக்கு பயன்படுத்திக்கொள்ளும்படி வேண்டுகிறோம். ரூபாய் 100/- மட்டும் அனுப்பி இப்புத்தக தொகுப்பை பெற்றுக்கொள்ளுங்கள்!

## தபால் வழி பைபிள் பாடங்கள்







## கைபிரதிகள்








உங்கள் சுவிசேஷ ஊழியத்திற்கு கைபிரதிகள் பல்வேறு தலைப்புகளில் பாதி விலையில் கிடைக்கும். விபரங்களுக்கு : 92 4421 4421, 92 4431 4431

## BIBLE STUDY BOOKS IN ENGLISH











AVAILABLE FOR SPECIAL PRICE!


If undelivered please return to :

**EDITOR**
**KIRUBAIYULLA VAARTHAI**
P.O. Box No. 15, Arasaradi,
Madurai - 625 016. India
biblecourseindia@gmail.com
@graciouswordcoc
92 4421 4421, 92 4431 4431

To